# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **D.A.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

பிரச்சினைகளின் உக்ரத்தை உள்ளபடி உணர்த்தும் பெருமாள், அவற்றுக்காண தீர்வுகளையும் வழங்குவதில் வல்லவர். பகவத்கீதையில் பலவிதமான மார்க்கங்களை அர்ஜுனனுக்குச் சொல்லி இறுதி அத்யாயத்தில் 'என்னைச் சரண் அடைந்து விட்டால் இந்த சிக்கல்கள் எதுவும் இல்லாமல் முக்தியடையலாம்' என்று சொன்ன கீதாசார்யன் தானே அவன்! இறந்த பின் நம் ஆத்மாவை எதிர்கொள்ளும் பிரேத ஜென்மத்திலிருந்து நாமும் நம் முன்னோர்களும் தப்ப ஒரு இரட்டை வழியைக் காட்டுகிறான், அந்த இன்பத் திருமால். இரட்டை என்று நான் சொல்லக் காரணம் ஒன்று ஞானவழி, இன்னொன்று கர்ம வழி.

வைணவ நெறியை பின்பற்றும் நம் போன்றோர்க்கு ஞானவழியைக் காட்டுகிறான். அதாவது பக்தி சரணாகதி, ஸ்ரீவைஷ்ணவத் தொண்டு முதலியவற்றைக் கடைபிடிப்பது.

"எய்ப்பென்னை வந்து நலியும் போதங்கேதும் நான் உன்னை நினைக்க மாட்டேன், அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளி யானே!" என்று பெரியாழ்வார் செய்தது போல் நாம் உயிரோடு இருக்கிறபோதே சாவுக்குப்பின் நற்கதி வேண்டும் என்று விண்ணப்பிக்கலாம். 'ஒரு ஸ்ரீவைஷ்ணவனின் திருவடி நிழலில் ஒதுங்கியிருப்பது', என்று நம் பூர்வர்கள் பணித்தபடி ஆசார்ய புருஷர்களின் அனுக்ரஹத்தில் வாழ்வது பிரேதஜென்ம அச்சத்தை நமக்குப் போக்கித் தரும். கணக்கில்லாமல் செய்த பாவங்கள் கடவுளை நினைப்பதால் போய்விடுமா என்று நீங்கள் கேட்கலாம். அதற்குப் பதிலை சுகப்ரம்மம் சொல்கிறார். ஸ்ரீமத் பாகவத மஹாபுராணத்தில் 6வது ஸ்கந்தத்தில் முதல் இரண்டு மூன்று அத்யாயங்களில் ஒரு கதை வடிவில் இந்த விஷயம் விவரிக்கப்படுகிறது. அஜாமிளன் என்று ஒருவன் இருந்தானாம். அவன் செய்யாத பாவமில்லை. அதர்ம வாழ்க்கை வாழ்ந்தவன். அவன் சாகும் போது தன் கடைசி மகனை "நாராயணா" என்று அவன் பெயர் சொல்லி அழைத்தான், உடனே அவன் உயிர் பிரிந்தது. அவன் செய்த பாவங்களுக்காக யமதூதர்கள் அவனை நரகத்திற்கு இழுத்துச் செல்ல வந்தபோது பெருமாளின் தூதர்கள் எதிரே தோன்றி அவர்களைத் தடுத்து, 'சாகும் போது கடைசியாக அவன் சொன்ன வார்த்தை 'நாராயணா' என்பது. அது அவனுடைய மகனுடைய பேர் தான் என்றாலும் அது எம்பெருமான் திருநாமம் அல்லவா' என்று கூறி அவனை ஸ்ரீவைகுண்டத்துக்கு அழைத்துச் சென்றார்கள் என்று சுகர் கூறுகிறார்.

'நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்' என்றார் ஆலி நாட்டு அரசர். பகவானை தியானிப்பது பாவங்களைப் போக்கும். பகவானுடைய கதையைக் கேட்பது கூட நற்கதி கொடுக்கும். எத்தனையோ சாந்தி

சடங்குகள் செய்தும் நற்கதி அடையாத ஒரு ஆத்மா ஆவி நிலையில் இருந்தவாறே "நான் நற்கதி அடைய ஏழு நாள்களுக்கு ஸ்ரீமத்பாகவத உபந்யாசம் ஏற்பாடு செய்" என்று யாசித்து அந்த பாகவத ஸப்தாகம் முடிந்த போது நற்கதி யடைந்ததாக இன்னும் ஒரு வரலாறு உண்டு. மரமாய் நின்ற ஒரு ஆத்மாவுக்கு திருவிலச்சினை சம்ஸ்காரம் செய்வித்து ஒரே நாளில் அதை பிறர் பார்க்க நம் பூர்வாச்சாரியார் பரகதிக்கு அனுப்பிய வரலாறும் ஸ்ரீவைஷ்ணவ சம்ப்ரதாயத்தில் காணப்படுகிறது. திருமால் பக்தியும், அவனுடைய தொண்டருக்கு சேவையும், பகவத் கைங்கரியமும், நமக்கும் நம் முன்னோர்களின் சார்பில் அவற்றை நாம் மேற்கொண்டால், நம் முன்னோர்களுக்கும் ஆத்ம சாந்தி தரும்.

இனி, பெருமாள் காட்டிய அடுத்த வழியைச் சொல்லுகிறேன். அது கர்ம வழி. அதாவது சடங்கு மார்க்கம். இது தானத்தைப் பற்றியது. நமக்காகவோ நம் முன்னோர்களுக் காகவோ செய்யப்படும் தானம் ஆத்மாவுக்கு சாந்தி கொடுக்கும். வ்ருஷோத்சர்க்கம் என்று ஒன்று உண்டு. பழக்கத்தில் இதை வ்ருஷோற்சனம் என்றும் சொல்லுவார்கள். வ்ருஷ என்றால் காளை. காளையை தானம் செய்ய வேண்டும். ஒரு காளைக் கன்றை மந்திர நீரால் நீராட்டி ஆடை ஆபரணம் கந்த புஷ்பங்களால் அலங்கரித்து மேலும் நான்கு ஆண் கன்றுகளோடு சேர்த்து அதை தானம் செய்ய வேண்டும். யாருக்கு என்பது கேள்வி? முறைப்படி வேதம் பயின்ற, ஒழுக்கமான, பிராம்மண முறைப்படி வாழ்கிற ஒரு உத்தம ப்ராம்மணனுக்குக் கொடுக்க வேண்டும். அந்த பிராம்மணன் ஒழுக்கமில்லாதவனாக ஆசாரங்களை முறைப்படி கடைப்பிடிக்காதவ னாக இருந்தால் அந்த தானம், தானம் கொடுத்தவனுக்கும் வாங்கினவனுக்கும் தீமையாய் முடியும் என்று பெருமாள் எச்சரிக்கிறார். கன்றோடு கூடிய பால் கறக்கும் பசுவையும் கோதானமாகக் கொடுக்கலாம் என்று சாஸ்திரம் சொல்கிறது.

வேதம் கற்றவனுக்கு ஏன் தானம் செய்ய வேண்டும்? என்பது இன்றைய இளைய தலைமுறையின் கேள்வி. இந்து மதத்தின் அஸ்திவாரமே வேதங்கள் தாம். வேதம் இல்லையென்றால் இந்து மதம் இல்லை. இறைவன் யார், ஆத்மா யார், தேவர்கள் யார், சொர்க்கம் என்றால் என்ன மோட்சம் என்றால் என்ன, நரகம் என்றால் என்ன எந்த தெய்வத்தை எந்த மந்திரம் சொல்லி எப்படி ஆராதிக்க வேண்டும், பிறப்பு என்றால் என்ன, இறப்பு என்றால் என்ன, புண்யம் என்ன, பாவம் என்ன என்று இவ்வளையும் எடுத்துச் சொல்வன வேதங்கள்.

இந்த வேதங்களை வழிவழியாக தன் தலையில் தாங்கி அந்தப் பாரம்பரியம் அழியாமல் கட்டிக்காப்பவன் வேதபிராம்மணன். அவன் வணக்கத்திற்குரியவன். தெய்வத்துக் குச் சமம். அவனுக்கு செய்யப்படும் மதிப்பும் அவமதிப்பும் ஒட்டு மொத்த இந்து மதத்துக்கே செய்யப்படுவதா கும். ஏன், இறைவனுக்கே செய்யப்படுவதாகும். பிராம்மணப்ரிய: அதாவது பிராம்மணனை விரும்புகிறவன் என்று பெருமாளுக்கு ஒரு நாமமே உண்டு. அதனால் தான் காலம் காலமாக அந்தணர்க்கு அக்ர பூஜை செய்து கவுரவித்தது இந்திய சமுதாயம். இந்த கோதானம் பற்றியும் அதன் சடங்குகள் பற்றியும் அடுத்தடுத்து, இறந்து போன ஆத்மாவுக்குச் செய்ய வேண்டிய கிரியைகள் பற்றியும் இனித்தொடரும் கட்டுரையில் விவரிக்கிறேன்.